பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

28 ] சென்னை—ஞாயிறு, அக்டோபர் 20, 1946. [ விலை. அணா. 2

## தவறு

சென்னையிலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"அநேக இடங்களில் காங்கிரஸ்காரர்கள் காந்தி ஜயந்தி விழாக் கொண்டாடுவதற்காக பணம் வசூல் செய்தார்கள். ஜனங்கள் தாராளமாகக் கொடுத்தார்கள். ஆனால் வசூல் செய்த பணத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்படவில்லை. எப்படி பணம் செலவு செய்யப்பட்டது என்பது ஜனங்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை."

பதில் :—இது உண்மையானால் முற்றிலும் தவறாகும். தருமத்திற்காகக்கொடுத்த பணம் பொது ஜனங்களுக்குச் சொந்தமாகும். அத்தகைய பணம் பொது ஜன நிதி என்று காந்தியடிகள் திரும்பத் திரும்பச்சொல்லி இருக்கிறார். அந்தப் பணத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து, பொது ஜனங்களுக்கு நன்மையான காரியங்களுக்கே செலவு செய்யவேண்டும். ஒரு பைசா செலவழித்தால் கூட அதற்குக் கணக்கு வைத்திருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டிய அவசியமில்லை.

புது தில்லி, – 11-10-46 – அமிர்தகௌர்.

## ஐந்தாவது சுதந்திரம்

அமெரிக்க ஜனாதிபதியா யிருந்த ரூஸ்வெல்ட் யுத்தம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் சகல மக்களுக்கும் நான்கு விதமான சுதந்திர உரிமைகள் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று சொன்னார்.

இப்பொழுது தென் ஆப்ரிக்காவில் உள்ள வித்வாட்டர்ஸ்ரேண்ட் என்னும் இடத்தில் இருக்கும் சர்வகலாசாலையில் பட்ட மளிப்பு விழா நடந்த பொழுது, அதன் அத்தியக்ஷகர் மகாகனம் ஜே. எச். ஹாப்மேயர் என்பவர் நிறவேற்றுமை பாராட்டாத சுதந்திர உரிமையை ஐந்தாவது சுதந்திர உரிமையாகக்கூறினார்.

அவர் கூறியதாவது :—

"நாம் காரணமில்லாமல் பிறரிடம் துவேஷம் கொள்ளும் துர்க்குணத்திற்கு அடிமையா யிருக்கிறோம். நாம் நம்முடன் வாழும் தென் ஆப்பிரிக்கர்களுடைய நிறத்தின் காரணமாக அவர்களைத் தவறாக நடத்துகிறோம். நாம் எந்த நாஜிக்கொள்கையை அழிப்பதற்காக யுத்தம் செய்தோமோ அந்த நாஜிக் கொள்கையில் ஒரு பகுதியாக உள்ள உயர்ந்த ஜாதிக் கொள்கைக்கு இரையாகி இருக்கின்றோம். இந்த மாதிரி இருந்துகொண்டு நாம் நம்மை சுதந்திரமுள்ள சமூகத்தார் என்று கூறிக்கொள்வதும் சுதந்திர புருஷர்களுடைய பரம்பரையில் வந்தவர்கள் என்று பறைசாற்றிக் கொள்வதும் வெறும் கேலிக்கூத்தாகும். எவ்வளவுதூரம் தென் ஆப்பிரிக்காவில் அகாரணமான துவேஷ மனப்பான்மை பரவி இருக்கிற தென்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன். எல்லா சமூகத்தாரையும் நியாயமாக நடத்தவேண்டுமென்றும் ஐரோப்பியர்களுக்குச் சரி சமானமாக ஐரோப்பிய ரல்லாதாரை நடத்தவேண்டுமென்றும் யாரேனும் கூறினால் உடனே அவரை கம்யூனிஸ்ட் என்று கூறி கண்டனம்செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள்.

நிறத்துவேஷம் இல்லாதிருத்தலும் ஒரு சுதந்திர உரிமையாகும். நாம் போர்புரிந்து பாதுகாக்க வேண்டிய சுதந்திர உரிமைகளில் அது தாழ்வானதன்று. நாம் இன்று அந்தத் துவேஷத்திற்கு அடிமையா யிருப்பதால் அதிகமான நஷ்டமடைந்து வருகிறோம். நம்முடைய நாட்டிலுள்ள மக்கட் செல்வ முழுவதையும் உபயோகிக்க மனமில்லாம லிருப்பதால் நாம் அந்த அளவுக்கு செல்வ நஷ்டமடைகின்றோம். உலகத்திலுள்ள மற்ற தேசங்களுடைய நல்ல எண்ணத்தையும் நன்மதிப்பையும் இழந்து வருகின்றோம். மற்றவர்களுக்குக் கண்ணுக்குப் படாமல் நம் துவேஷங்களை பெட்டியில் போட்டு பூட்டி வைத்துவிட முடியாது. மற்ற தேசத்தாரெல்லோரும் நம்முடைய செயல்களை நாளுக்கு நாள் அதிகமாக ஆராய்ந்து வருகிறார்கள். சர்வதேசக் கொள்கைகளாக எவைகள் உலகத்தில் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றனவோ அவைகளுக்குத் தக்கதாக நம்முடைய கொள்கைகளை வகுத்துக் கொள்ளாதால் தென் ஆப்பிரிக்கா நாளுக்கு நாள் அதிகமாகத் துன்பமடைந்து கொண்டிருக்கிறது.

ஐரோப்பியர்கள் விஷயத்தில் ஒரு தர்மத்தையும் ஐரோப்பிய ரல்லாதவர்கள் விஷயத்தில் வேறொரு தர்மத்தையும் அனுஷ்டித்து வருகிறோம். கிறிஸ்தவ தர்மத்தை நிறத்துக்குத் தக்கவாறு வெவ்வேறு விதமாக கையாண்டு வருகிறோம். இப்படியே நடந்து கொண்டு போனால் பிளேடோ என்னும் கிரேக்க ஞானி கூறியது போல நம்முடைய ஆன்மா பொய்யால் இருள் அடைந்து போகும். கிறிஸ்தவ தர்மத்தை கைக் கொள்வதாகச் சொல்லிக் கொண்டு அதற்கு மாறாக நடந்தால் அழிந்துதான் போவோம்.

ஆதலால் "மனிதனுடைய மனத்தை அடிமையாக்க முயலும் ஒவ்வொரு காரியத்தையும் இடைவிடாமல் எதிர்ப்பேன் என்று கடவுளுடைய சன்னிதானத்தில் சபதஞ் செய்கின்றேன்" என்று அமெரிக்க ஜனாதிபதி தாமஸ் ஜபர்ஸன் கூறியது போலவே நீங்களும் கூறத் தயாரா யிருக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களுடைய வழக்கு ஐக்கிய நாட்டின் ஸ்தாபனத்தின் முன்னால் விவாதிக்கப் படும்பொழுது இந்தக் கருத்துக்களை வெளியிட்டவரும் அவருடைய தலைவர் ஜெனரல் ஸ்மட்ஸும் அவைகளை மறந்து விட மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

புது தில்லி. — 13-10-46 — பியாரேலால்.

## விவசாயத்தில் இயற்கைக்கு விரோதமான பழக்கங்கள்

ஆரோக்கியமா யிருப்பதற்கு, பார்ப்பதற்கு நல்லதாகத் தோன்றும் உணவு கிடைத்தால் போதாது. ஆரோக்கியம் தரும் முறையில் உண்டாக்கப்பட்ட உணவாகவும் இருக்க வேண்டும் என்பதை இப்போது எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். நிலம் ஆரோக்கியமா யிருந்தால்தான் உணவும் ஆரோக்கியமா யிருக்கும். உடம்பில் சதை இருப்பதை வைத்து ஆரோக்கியத்தை மதிப்பிட முடியாது. அது போலவே மாசூலின் அளவை வைத்து அதன் ஆரோக்கியத் தன்மையை மதிப்பிட முடியாது. செயற்கை உரங்கள் பரிசு பெறக் கூடிய அளவு அதிகமான தானியத்தையும் பருமனான தானியத்தையும் அளிக்கக் கூடும். ஆனால் அவ்விதம் உண்டாக்கிய தானியத்தில் ஜீவ சத்துக்கள் காணப்படுவதில்லை. அந்தத் தானியத்தை உண்ணும் மிருகங்கள் நோயுற்று மெலிந்து போகின்றன. இயற்கை உரம் நல்லதா செயற்கை உரம் நல்லதா என்பதைப் பற்றி இங்கிலாந்தில் வில்ட்ஷேர் என்னு மிடத்தில் மிக நல்ல விதமாக பயிர்செய்து வரும் விவசாயி பிரண்டுஸைக்ஸ் என்பவர் விவசாயி என்னும் பத்திரிகையில் ஒரு உபயோகமான கட்டுரை எழுதி யிருக்கிறார். அதைக் குறித்து நியூஸ் ரிவியூ என்னும் பத்திரிகை கீழ்க் கண்டவாறு எழுதி யிருக்கிறது :—

“இரண்டு வருஷங்களுக்கு முன் ஸைக்ஸ் பசுக்களும் பன்றிகளும், பந்தயக் குதிரைகளும் வளர்க்க ஆரம்பித்தார். அவைகள் நாடெங்கும் கீர்த்தி பெற்றன. அவருடைய பசுக்கள் எங்கும் காணமுடியாத அளவு பால் கொடுத்தன. அதைக் கண்டு சர்க்கார் மற்றவர்களையும் அதுபோல் வளர்க்கும்படி சொல்ல விரும்பினார்கள். ஆனால் அவைகளுக்கு க்ஷய ரோகமிருக்கிறதா என்று பரிசோதித்த பொழுது மூன்றில் இரண்டு பங்கு பசுக்களுக்கு அந்த நோய் இருப்பதாகத் தெரிந்தது. அதைக் கண்டதும் அதன் காரணம் என்னவென்று ஸைக்ஸ் யோசித்தார். இயற்கை உணவுகளைக் கொடாமல் செயற்கை உணவுகளைக் கொடுத்ததும் செய்கை உரங்களைக் கொண்டு விளைவித்த உணவுகளைக் கொடுத்ததும் தான் காரணம் என்று எண்ணினார். அதன்மேல் தம்முடைய பசுக்களை விற்று விட்டு புதிய பசுக்கள் வாங்கினார். அவருடைய நிலம் ஒன்றும் விளையாத நிலம்போல் இருந்தது. ஆனால் இயற்கை முறையில் பயிர் செய்யவும் மாடு வளர்க்கவும் ஆரம்பித்தார். அதன் காரணமாக மாசூலும் அதிகமாகக் கிடைத்தது. பசுக்களும் பெரிய பசுக்களாக வளர்ந்தன.

அவைகளிடையே நோய்கள் உண்டாக வில்லை. அதற்குக் காரணம் இயற்கை உரங்கள் போட்டு உண்டாக்கிய உணவுதான் என்று கூறுகிறார். அவர் செடி கொடிகள் மக்கிப் போனதையும் சாணத்தையும் தான் உரமாக உபயோகிக்கிறார். செயற்கை உரங்களைப் பற்றி அவைகள் உண்டாக்குகிறவர்கள் செய்யும் பிரசாரத்தினாலேயே இயற்கை உரம் மறைந்து செயற்கை உரம் பெருகி விட்டது. இப்படியே நடந்து கொண்டு போனால் நிலத்தின் செழுமை அடியோடு ஒழிந்து போகும். அது போன்ற கேடு மனித சமூகத்திற்கு வேறெதுவும் கிடையாது.

செயற்கை முறையில் கர்ப்பம் தரிக்கச் செய்வது மிகவும் கெட்ட பழக்கமாகும்.

சாக்கடையைக் கடலுக்குள் போகும்படி விடுவது நல்ல உரத்தை வீணாக்குவதாகும்.

செயற்கை முறையில் தானியத்தை உலர வைத்தால் ஆரோக்கியமான உணவு கிடையாது.

தானியத்திலிருந்து தவிட்டை நீக்க ஆரம்பித்த பிறகு தான் பெண்களிடம் மலட்டுத் தன்மை அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. தவிடு நீக்காமல் உணவை உண்ணும் வழக்கத்தை மேற் கொள்வதைப் போல மனிதனுக்கு வேறெதுவும் அதிக நன்மையைச் செய்யாது. வைக்கோலை நிலத்துக்கு உரமாகப் போட்டு உழுவதை விட்டு விட்டு வைக்கோலை எரிப்பது விவசாயி செய்யக் கூடிய மிகப் பெரிய பாவச் செயல்களில் ஒன்றாகும்.

அநேகர் பசுக்களை தொழுக்களில் கட்டி வைத்து செயற்கை உணவுகளைக் கொடுக்கிறார்கள். அந்த உணவுகளை அவைகளால் ஜீரணம் செய்ய முடியாது. அதனால் அவைகள் ஆரோக்கியமா யிருக்கமாட்டா’,

புது தில்லி, — 14-10-46 — பியாரேலால்.

## ராட்டினம் கைக் கொள்ளச் செய்வது எப்படி ?

ஜனங்கள் சில விஷயங்களில் அமோகமான ஆசை கொள்கிறார்கள். அத்தகைய விஷயங்களில் ஒன்று கைராட்டினம். லக்ஷக் கணக்காக விற்பனையாயிற்று. ஆனால் இப்பொழுது அவைகளெல்லாம் எங்கே? ஏன் அவைகள் சுழலவில்லை. அதன் காரணத்தைக் கண்டு பிடித்து ஜனங்களிடம் மறுபடியும் உத்ஸாகத்தை உண்டுபண்ண வேண்டும்.

உத்ஸாகம் குறைந்ததற்குக் காரணங்கள் :—

(1) விற்பனைக்கு வைத்திருக்கும் கை ராட்டினங்கள் சரியாக வேலை செய்வதில்லை.

(2) வேலை செய்தாலும் இடையில் ஏதேனும் கஷ்டமேற்பட்டால் அதைச் சரிப்படுத்திக் கொடுக்க ஆள் கிடையாது.

(3) கை ராட்டினத்தை விற்ற பின் விற்போருக்கும் வாங்குவோருக்கும் தொடர்பில்லாமல் போய் விடுகிறது.

(4) நல்ல திரிகள் கிடைப்பதில்லை.

(5) நூற்ற நூலை நெய்வதற்கு எவ்வித ஏற்பாடும் கிடையாது.

இந்தக் குறைகள் நூற்பவர்களுடைய உத்ஸாகத்தை குறைத்து விடுகின்றன. அவைகளை எப்படி நிவர்த்திக்கலாம் ?

(1) ராட்டினம் விற்கும் கடையில் உள்ளவர்கள் ராட்டினத்தில் ஏற்படும் குறைகளை பழுது பார்க்கக் கூடியவர்களா யிருக்க வேண்டும். அதற்குக் குறைந்த அளவு பணமே வாங்கிக் கொள்ள வேண்டும். நூல் நூற்பவர்கள் தாங்களாகவே ராட்டினத்தை பழுது பார்க்கக் கூடியபடி அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவும் வேண்டும்.

(2) கதர்க் கடைகள் ராட்டினம் வாங்குகிறவர்களுடைய பெயரையும் விலாசத்தையும் பதிவு செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(3) ராட்டினத்தில் பழுதுகள் ஏற்பட்டால் அவைகளை எங்கே எப்படி திருத்திக் கொள்ளலாம் என்பதைக் குறித்து ஒரு துண்டு பிரசுரம் அச்சடித்து ராட்டினம் விற்கும்பொழுது அத்துடன் கொடுக்க வேண்டும்.

(4) விற்பனை செய்யும் ராட்டினத்தில் பழுதுகள் காணப் பட்டால் அதற்காக விலையைக் குறைத்துக் கொள்ள வேண்டும். பணம் வாங்காமல் பழுது

பார்த்துக்|கொடுக்கவும் வேண்டும். பழுதான ராட்டினத்தைக் கொண்டு வந்தால் அதை வாங்கிக் கொண்டு புதிய ராட்டினத்தைக் கொடுப்பது நல்லது.

(5) பஞ்சு வெட்ட கற்றுக் கொடுக்க வேண்டும். திரிகள் செய்து விற்பதை நிறுத்தி விட வேண்டும். அதற்குப் பதிலாக பருத்தியையே விற்பனை செய்ய வேண்டும்.

(6) ஒவ்வொரு வீட்டிலும் கைத்தறி வேலை செய்ய ஆரம்பிக்கும் வரை கடைகளுக்குக் கொண்டு வரும் நூலை நெசவு செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் கதர்க் கடைகள் விற்பனைக் கடைகளாக இல்லாமல் உண்மையான தேச ஊழியர்கள் உள்ள கை ராட்டின உற்பத்தி சாலையாக ஆகிவிட வேண்டு மென்பதேயாகும்.

கனுகாந்தி.

திரு. கனுகாந்தியின் மேற்கண்ட குறிப்பு கவனமாக ஆராயவேண்டியதாகும். கை ராட்டினமானது மேனாட்டில் காணப்படும் சிறிய மெஷின் போன்றதுமில்லை. பெரிய மெஷின் போன்றதுமில்லை, என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மேனாடுகளில் கோடிக்கணக்கான கடிகாரங்கள் சில குறிப்பிட்ட இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு உலக முழுவதிலும் விற்பனை செய்யப்படுகின்றன. அது போல் தான் தையல் மெஷினும். இவைகளெல்லாம் அந்த நாகரிகத்தின் சின்னங்கள் கை ராட்டினமானது அதற்கு நேர் விரோதமான நாகரிகத்தின் சின்னமாகும். நாம் கை ராட்டினத்தை ஒரே இடத்தில் லக்ஷக்கணக்காக உற்பத்தி செய்து நாட்டில் பரப்ப விரும்பவில்லை. நூற்பவர்கள் வசிக்கு மிடத்திலேயே கைராட்டினத்தையும் அதன் துணைகருவிகளையும் உற்பத்தி செய்வதே நமது லட்சியம். கை ராட்டினத்தால் ஏற்படும் நன்மை அதில் தான் அடங்கி இருக்கிறது. கை ராட்டினத்தில் பழுது ஏற்பட்டால் நூற்பவர்களே பழுது பார்த்துக்கொள்ளும் படியாக கற்றுக்கொடுக்க வேண்டும். அப்படிக் கற்றுக் கொடுப்பது சர்க்கா சங்கத்தின் கடமையாகும். இந்த விதமாகக் காரியங்களைச் செய்து கொண்டு போனால்தான் கதர்த்துணி மில்த்துணியை இல்லாமல் செய்துவிட முடியும்.

புது தில்லி — 12-10-46 — மோ. க. காந்தி.

## இந்த ரகசியம் ஏன்?

கேள்வி :—சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கொன்றுகொண்டிருக்கும்பொழுது அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதை வெளியிடாமல் இருப்பதின் காரணம் என்ன?

பதில் :—இந்தக் கேள்வி என்னுடைய மனதிலும் அடிக்கடி எழுந்தது என்பதை ஒப்புக்கொள்கிறேன். எந்த எதேச்சாதிகார சர்க்காருக்குப் பதிலாக இப்பொழுது தேசிய சர்க்கார் ஏற்பட்டிருக்கிறதோ அந்த எதேச்சாதிகார சர்க்காருடையக் கொள்கை தான் இது. அவர்களிடமிருந்துதான் தேசிய சர்க்கார் இதைப் பெற்றிருக்க வேண்டும். இப்படி மூடி வைக்கும் கொள்கைக்கு வேறு காரணமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. யார் யாரைக் குத்தினார் என்பது யாருக்குத் தெரியக்கூடாதோ அவருக்குத் தெரிந்து விடுகிறது. யாருக்குத் தெரிய வேண்டுமோ அவருக்குத்தான் தெரியாம லிருக்கிறது.

தம்முடைய மதத்தைப் பின்பற்றினாலும் முதலில் இந்தியர்கள் பிறகுதான் தத்தம் மதத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொள்வதில் பெருமையடையக்கூடிய இந்துக்களும் முஸ்லிம்களும் இதர மதத்தினரும் ஏராளமா யிருக்கின்றனர். அவர்கள் மூடபக்தியுடையவர்களை அக்கிரமங்கள் செய்யாதபடி தங்களால் இயன்ற முயற்சிகளை எல்லாம் செய்து வருகிறார்கள். அத்தகையோர் பலரை நான் அறிவேன். விஷயங்களை அறிந்து கொள்வதற்கு அவர்களுக்குப் பத்திரிகைகளைத் தவிர வேறு சாதனங்கள் கிடையா. விளக்கு ஏற்றினால்தான் இருட்டு சீக்கிரமாக ஒழியும்.

புது தில்லி, — 12-10-46 — மோ. க. காந்தி

## சிறைச் சீர்திருத்தங்கள்

ஒரு சமயத்தில் சிறை அதிகாரி வேலை பார்த்து வந்த நண்பர் ஒருவர் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் உணவுப் பஞ்சம் துணிப் பஞ்சம் சம்பந்தமாக கீழ்க் கண்ட யோஜனைகளை அனுப்பியிருக்கிறார்.

(1) சிறைகளிலும் சிறுவர் சிறைகளிலும் பைத்திய ஆஸ்பத்திரிகளிலும் அவை போன்ற ஸ்தாபனங்களிலுமுள்ள காலி இடங்கள் எதையும் தரிசாகப் போடாமல் உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு, காரட், முள்ளங்கி போன்ற கிழங்கு தினுசுகளை உற்பத்தி செய்ய உபயோகிக்க வேண்டும். இந்தக் கிழங்குகளில் 'கால்ஷியம்' போன்ற உலோகச் சத்துக்களும் ஜீவசத்துக்களும் ஏராளமாக இருக்கின்றன. இந்தக் கிழங்குகளைத் தினந்தோறும் ஒரு வேளைச் சாப்பாட்டில் அரிசிக்கும் கோதுமைக்கும் பதிலாக உபயோகிக்கலாம்.

(2) காலை ஆகாரத்திற்கும் மாலை ஆகாரத்திற்கும் இடையில் அதிக நேர மிருந்தால் சமைத்த உணவு வீணாவதைத் தடுக்கலாம். கைதிகளைக் கலந்து கொண்டு அவர்களுக்குத் தினந்தோறும் இரண்டு வேளை உணவே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(3) சிறை உத்யோகஸ்தர்களுடைய வீட்டு வேலைகளைச் செய்வதற்கு சிறந்த கைதிகளை உபயோகப்படுத்தும் வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும்.

(4) சிறை உபயோகத்திற்காக உணவும் துணியும் கடையில் வாங்குவதைக் குறைக்கும் பொருட்டு உணவுப் பொருள்களையும் பருத்தியையும் சிறையிலேயே உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும. ஒவ்வொரு சிறையிலும் நல்ல விதமான பால் பண்ணை அமைக்க வேண்டும். சிறை அதிகாரிகள் பசுக்கள் வைத்துக் கொள்ளுவதைத் தடுக்க வேண்டும். சிறையிலுள்ள பால் பண்ணையி லிருந்து பாலை விலைக்கு வாங்கிக் கொள்ள அவர்களுக்கு அனுமதியளிக்கலாம். இப்பொழுது விவசாய இலாகாவும், கைத் தொழில் இலாகாவுய் கால் நடை மருத்துவ இலாகாவும் ஒத்துழையாம லிருப்பதுபோல் இருக்கக் கூடாது.

(7) சிறையில் மலத்தை உரமாக்கும் முறையை கைக் கொள்ள வேண்டும். கால் நடைகளின் சாணத்தை வீணாக்காமல் உரமாக உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

(8) சிறையிலேயே கால் நடைகளுக்கு வேண்டிய தீனியைப் பயிர் செய்ய வேண்டும். மேய்ச்சல் நிலங்களும் வாங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் ஹரிஜன்

அக்டோபர் 20 ஞாயிறு 1946

## உண்மையான இந்தியா

நான் இந்தியா முழுவதிலும் கிராமாந்திரங்களில் அடிக்கடி பிரயாணம் செய்திருக்கிறேன். அதனால் இந்தியாவிலுள்ள ஏழு லக்ஷம் கிராமங்களுக்கும் போலீஸ் பாதுகாப்பு கிடைப்பதில்லை என்றும் அவைகளுக்கு அது தேவையில்லை என்றும் நான் தைரியமாகச் சொல்லமுடியும். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம முனிசிப் இருக்கிறார். அவர் அங்கே கொடுங்கோல் ஆட்சி செய்கிறார். அரசாங்கத்து ரெவன்யூ உத்தியோகஸ்தர்களுக்கு உதவி செய்வதற்காகவே அவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். கிராமவாசிகளுடைய சொத்துக்களுக்கும் ஆடுமாடுகளுக்கும் மனிதராலும் மிருகங்களாலும் கேடு ஏற்படும் சமயங்களில் அவர் அவர்களுக்கு உதவி செய்வதாக நான் கேள்விப்பட்டதில்லை. அந்த மாதிரி அவர் நடந்து கொள்வதற்கு அவரைக் குறைகூற முடியாது. எந்த வேலைக்காக அவரை நியமித்திருக்கிறார்களோ அந்த வேலையை அவர் ஒழுங்காகச் செய்கிறார். ஜனங்களின் ஊழியராகத் தம்மை கருதிக் கொள்ளும்படி அவருக்குக் கற்றுக் கொடுக்கப்படவில்லை. அவருடைய எஜமானர் வைஸ்ராய். கிராமத்தில் வைஸ்ராயின் பிரதிநிதியாக நடந்து வருகிறார். மத்திய சர்க்காரில் ஏற்பட்ட மாறுதல் இன்னும் கிராமங்களுக்குப்போய் எட்டவில்லை. அது எப்படி எட்ட முடியும்? கீழிருந்து வந்தாலல்லவோ எட்ட முடியும்? மந்திரிகளை நீக்க மட்டுமின்றி சிறையிடக்கூட சட்டபூர்வமான அதிகாரமும் ராணுவ அதிகாரமும் இன்னும் வைஸ்ராயிடமே இருந்து கொண்டிருக்கிறது. வைஸ்ராயைச் சிறையிலிட மந்திரிகளிடம் எவ்வித அதிகாரமும் இல்லை. கலெக்டர் முதலிய உத்தியோக வர்க்கத்தினர் இன்னும் அவருடைய ஆதிக்கத்தின் கீழாகவே இருந்து வருகிறார்கள். இப்படிச் சொல்வதைக் கொண்டு வைஸ்ராய் அதிகார முழுவதையும் துறந்துவிட எண்ணவில்லை என்றோ எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகப் பிரிடிஷ் ஆதிக்கத்தைத் துறந்துவிட தாம் தயாராயிருப்பதை ஒவ்வொரு கிராமமும் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை என்பதாகவோ எண்ணிக்கொள்ளக் கூடாது.

இதை நான் எதற்காக எழுதுகிறேன் என்றால் ஒவ்வொருவரும் தமக்குத் தாமே போலீஸ்காரர் என்று நாம் இன்னும் கிராமங்களிலிருந்து கற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே யாகும். நாம் எப்பொழுது பிறர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் அவரிடம் துவேஷம் கொள்ளாமல் இருக்கிறோமோ அப்பொழுதுதான் நமக்கு நாமே போலீஸ்காரராக இருந்துகொள்ளக் கற்றுக் கொள்ள முடியும்.

அரசியல் உணர்ச்சி யுள்ளவர்கள் இந்த விதமாக நடந்துகொள்ள முடியவில்லை என்றால் அவர்கள் அச்சத்தைத் துறந்துவிடவும் போலீஸ் உதவியையும் ராணுவ உதவியையும் கேட்காம லிருந்துவிடவும் தயாரா யிருக்கவேண்டும். என்றைக்கு ஒவ்வொரு வீடும் கோட்டையாக ஆகின்றதோ அன்றைக்குத் தான் இந்தியா உண்மையான சுதந்திரத்தைப் பெறும். ஒவ்வொருவரும் பிறரிடம் துவேஷம் பாராட்டாமல் உயிர் விடக்கூடிய உத்தம வித்தையை கற்றுக்கொள்ள வேண்டும். நம்மால் எதிரியைக் கொல்லமுடியாத இடத்தில் பிறரைக் கொண்டு கொல்வோம் என்பதையும் விட்டுவிடவேண்டும். இந்தப் பாடத்தை மட்டும் நாம் நம்முடைய மனத்தில் நன்றாகப் பதியவைத்துக் கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும். இந்த விஷயத்துக் காதாரமாக எத்தனையோ சான்றுகளைக் கூறலாம். அவைகளை ஆராய்ந்தால் நான் கூறுவது உண்மை என்று எளிதில் விளங்கும்.

புது தில்லி, — 12.10-46 — மோ. க. காந்தி.

## ஹிந்து தண்ணீரும் முஸ்லிம் தண்ணீரும்

வட நாட்டில் ரயில்வே ஸ்டேஷன்களில் முஸ்லிம் தண்ணீர் என்றும், ஹிந்து தண்ணீர் என்றும்; முஸ்லிம் டீ என்றும், ஹிந்து டீ என்றும் கத்துகிறார்கள். இந்தியாவிற்குப் புதிதாக வந்து ரயில் பிரயாணம் செய்யும் அந்நிய நாட்டார்கள் இப்படிக் கத்துவதைக் கேட்டதும் இதென்ன விபரீதமென்று வருத்தமும் திகைப்பும் அடைவார்கள், இப்பொழுது மத்திய சர்க்கார் முற்றிலும் தேசிய மயமாய் விட்டது. ஆஸப் அலி சாகிப் என்ற எல்லோர்க்கும் தெரிந்த இந்தியர் ஒருவர் ரயில்வே முதலிய போக்குவரத்து இலாகாவின் மந்திரியா யிருக்கிறார். இந்த நிலைமையில் அந்த வழக்கம் இன்னும் இருந்து கொண்டிருப்பது வெறுக்கத்தக்கதா யிருக்கிறது. இந்த வெட்ககரமான வழக்கம் இந்தியாவுக்கே சொந்தமானது. இந்த வழக்கத்தைச் சீக்கிரமாக இல்லாமல் செய்து விடுவார்கள் என்று நம்புகிறேன். ரயில்வே இலாகாவின் தலைவர் முஸ்லிமா யிருப்பதால் ஹிந்துக்களுக்கு நியாயம் கிடையாதென்று யாரும் எண்ண வேண்டாம்.

மத்திய சர்க்காரிலும் மாகாண சர்க்காரிலும் ஹிந்து முஸ்லிம் என்ற பாகுபாடு கிடையாது. அந்தப் பாகுபாடு இருக்கவும் கூடாது. எல்லோரும் இந்தியர்களே ஆவோம். மதமென்பது அவரவருக்குச் சொந்தமான விஷயமாகும். அத்துடன் மந்திரிகள் தினந்தோறும் மாலையில் கூடி ஒவ்வொருவரும் அன்று செய்த வேலைகளைக் குறித்துக் கலந்து பேசுவது என்ற ஒரு நல்ல வழக்கத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். மந்திரிகள் ஒவ்வொருவரும தங்கள் தங்கள் வேலைக்கு மட்டுமின்றி மற்ற மந்திரிகளுடைய வேலைக்கும் பொறுப்பாளியாவார்கள். அந்த விதமாகக் கூட்டுப் பொறுப்பு முறையிலேயே அவர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்து வருகிறார்கள். அவர்களில் யாரும் இந்த வேலை நான் செய்ய வேண்டிய வேலைகளில் சேர்ந்ததில்லை என்று எந்த வேலையைக் குறித்தும் சொல்ல முடியாது. ஆதலால் ரயில்வே ஸ்டேஷன்களில் ஒவ்வொரு வகுப்பாருக்கும் தனித் தனியாக உணவுப் பொருளை விற்றுவரும் இந்த புனிதமற்ற வழக்கத்தை ஒழித்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க நமக்கு உரிமையுண்டு. பரிசுத்தமான தூய்மை எல்லோர்க்கும் வேண்டியதேயாகும். எல்லா பானங்களுக்கும் குழாய்களை உபயோகப் படுத்தினால் பரம வைதிகர் கூட அவைகளை உபயோகிக்க தயங்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் பாலோ, காப்பியோ, டீயோ, தண்ணீரோ குழாய் மூலமாக தங்கள் லோட்டாவில் வாங்கிக் கொள்ளலாம். இதில் மத விரோதமான காரியம் எதுவும் இல்லை. ரயில்வே ஸ்டேஷன்களில் எதையும் வாங்கித் தீர வேண்டுமென்ற கட்டாயம் யாருக்கும் கிடையாது. அநேக வைதீகர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது ஜலமும் குடிப்பதில்லை. உணவும் உண்பதில்லை. எல்லோரும் ஒரே காற்றைத் தான் சுவாசிக்கிறோம். ஒரு பூமியில் தான் நடமாடுகிறோம். அந்த மட்டுக்குமாவது நாம் எல்லோரும் வித்தியாச

மில்லாமல் நடப்பது விசேஷம் தான். அதற்குக் கடவுளுக்கு வந்தனம் செலுத்துவோம்.

ரயில்வே ஸ்டேஷன்களிலாவது வகுப்புகளைக் காட்டும் முறையில் சாமான்களை விற்பது சட்ட விரோதமாகச செய்ய வேண்டும்.

இந்தியாவிலுள்ள பல்வேறு இனத்தாரிடையில் நட்பு உண்டாகும்படி செய்வதற்கும் அவர்களுக்குச் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் கற்றுக் கொடுப்பதற்கும் ரயில் வண்டிகளும் கப்பல்களும் சிறந்த சாதனங்கள் என்று நான் அடிக்கடி இந்தப் பத்திரிகையில் எழுதி வந்திருக்கிறேன். மந்திரிகள் தாங்கள் எதைச் சரியென்று பரிபூர்ணமாக நம்புகிறார்களோ அதன்படியே நடக்க மனோதைரியம் உடையவர்களாக இருப்பார்கள் என்றும் இந்த மிக்க அவசியமான சீர்திருத்தத்தை முற்றிலும் வெற்றிகரமாகச் செய்யும் விஷயத்தில் ரயில்வே உத்தியோகஸ்தர்களும், பொது ஜனங்களும் மனமுவந்து மந்திரிகளுடன் ஒத்துழைப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

புது தில்லி, — 12-10-46 — மோ. க. காந்தி

## மறுபடியும் டாக்டர் லோகியா விஷயம்

டாக்டர் ராம் மனோகர் லோகியா கோவா ஹைக்கோர்ட் பிரதம நீதிபதிக்கு எழுதிய கடிதம் அதிகமாக கவனிக்கப்பட வேண்டிய தகுதியுடையதாகும். அதை நான் தினசரிப் பத்திரிகைகளில் இருந்து எடுத்து கீழே தருகிறேன் :—

"என்னைக் கைது செய்த சமயத்தில் நான் அறிந்த மட்டில், கோவா சட்டம் எதையும் நான் மீறவில்லை என்றே எண்ணுகிறேன். நான் சட்டத்தை மீற உத்தேசித்திருக்கலாம்; ஆனால் அது விஷயத்துக்குப் புறம்பானதாகும். ரயில் வண்டி கோலம் என்னும் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்ததும் போலீஸ் உத்தியோகஸ்த்தர் ஒருவர் நான் இருந்த வண்டிக்குள் வந்தார். என்னிடம் கேள்வி எதையும் கேளாமல் உடனேயே என்னைக் கைது செய்தார். இப்பொழுது நடைமுறையிலுள்ள சர்வதேச சட்டமானது தாங்கள் விரும்பாத அன்னியரைக் கைது செய்து நாடு கடத்துவதற்கு போர்ச்சுகீஸிய அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிக்கின்றது. ஆனால் அன்னியர் எந்தக் சட்டத்தையேனும் மீறினால்தான் அவரைச் சிறையிலடைத்து வைக்க அதற்கு அதிகாரமுண்டு. போர்ச்சுகீஸிய அரசாங்கத்தார் இதற்கு முன் என்னை அன்னியனாக பகிரங்கப்படுத்தி இருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக சர்வதேசச் சட்டத்திலுள்ள ஒரு விதியை எடுத்துக் காட்டுகிறார்கள் அவர்கள் என்னைச் சட்டத்திற்கு விரோதமாகச் சிறைப்படுத்தியதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். எனக்கு நஷ்டஈடும் கொடுக்க வேண்டும். இல்லையானால் கோவாவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் சர்வதேச சட்டக்தை அமுல் நடத்த முயல்வதை விட்டுவிட வேண்டும். அவர்கள் என்னை செப்டம்பர் 29-ம் தேதி முதல் அக்டோபா் 2-ம் தேதிவரை மனிதன் சாகாமல் இருப்பதற்கு எவ்வளவு காற்று வேண்டுமோ அவ்வளவு காற்றோட்டம் மட்டும் உள்ள ஒரு அறையில் அடைத்து வைத்திருந்தார்கள்; இவ்விதம் நடத்தியதற்கும் மன்னிப்பும் கேட்க வேண்டும் நஷ்டஈடும் கொடுக்க வேண்டும்.

இப்பொழுது நல்லவிதமாக நடத்த ஆரம்பித்தபோதிலும் இன்னும் என்னைத் தனிச் சிறையிலேயே அடைத்து வைத்திருக்கிறார்கள். ஸ்நானத்திற்கு மட்டுமே என்னை வெளியே கூட்டிக்கொண்டு போகிறார்கள்.

என்னைப் பார்க்கவர யாருக்கும் அனுமதி கொடுப்பதில்லை. என்னைச் சிறையிலிட்டது சட்டவிரோதம். அத்துடன் இந்த விதமான அக்கிரமங்களும் நடக்கின்றன."

டாக்டர் லோகியா நஷ்டஈடு கேட்பதைக் குறித்து யாரும் சிரிக்க வேண்டியதில்லை. அவருக்கு ஆதரவு இருக்குமானால் கோவா அரசாங்கம் சீக்கிரமாக நஷ்ட ஈடும் கொடுக்கும், அவரிடம் மன்னிப்பும் கேட்டுக்கொள்ளும். சக்திவாய்ந்த அரசாங்கங்கள் தங்கள் பிரஜைகளில் மிகத் தாழ்ந்தவர்களுக்குக் கூட பிற நாட்டாரால் துன்பமோ அவமானமோ ஏற்பட்டால் அவைகளிடமிருந்து நஷ்டஈடு பெறுவது அபூர்வமான காரியமன்று. டாக்டர் லோகியா அற்பமான மனிதர் அல்லர். இப்பொழுது இந்தியாவில் தேசிய அரசாங்கம் நடைபெறுகிறது. நம்முடைய மந்திரிகள் அவமானத்தை சகிக்காதவர்களாக இருப்பார்களென்றே நம்புகிறேன். அதனால் அவர்கள் கோவா சர்க்காரைக் கண்டிக்கவும் அந்த சர்க்கார் தவறாக நடப்பதை விட்டுவிடும்படிக் கேட்டுக் கொள்ளவும் செய்தால் நான் ஆச்சரியப் படமாட்டேன். எதுவாயினும் பொதுஜனங்கள் எல்லோரும் தேசிய சர்க்காரையும் துன்பத்துக் காளாயிருக்கும் டாக்டர் ராம்மனோகர் லோகியாவையும் ஆதரிக்க வேண்டும். அவருக்கேற்பட்ட துன்பம் கோவாவிலுள்ள நம்முடைய தேச மக்களுக்கு ஏற்பட்டதும் அவர்கள் மூலமாக இந்தியா முழுவதற்கும் ஏற்பட்டதுமாகும்.

புது தில்லி, — 13-10-46 — மோ. க. காந்தி.

## ஒரே விதமான உடை

நன்றாகப் படித்தவரும் நல்ல எண்ண முடையவருமான நண்பர் ஒருவர் எழுதுகிறார் :—

"சென்ற நான்கு வார காலமாகக் குத்தும் வெட்டும் தீவைப்பதும் நடந்து வருகின்றன. அவற்றைப் பார்த்து என்னுடைய மனமானது அதிக வேதனை அடைந்திருக்கிறது. கலகங்கள் ஆரம்பித்த நாள் முதல் நான் அமைதியை நிலைநாட்ட முயன்று வந்திருக்கிறேன். நான் ஒரு மாஜிஸ்ட்ரேட். நான் முன்னால் ஒரு சமயம் இந்தியர்கள் எல்லோரும் ஒரே விதமான தேசிய உடை தரிக்க வேண்டுமென்று தங்களிடம் கூறியது ஞாபக மிருக்குமென்று எண்ணுகிறேன். என்னுடைய யோசனையை நீங்கள் அங்கீகரிக்கவில்லை. ஒரே விதமான தேசிய உடை தரிக்கவேண்டியதின் அவசியத்தைப் பற்றிய என் அபிப்பிராயம் முன்னிலும் அதிகமாக உறுதி அடைந்திருக்கிறது. ஷர்ட்டும் கால் சட்டையும் அணிந்தவர்களில் யாருமே குத்தப்படாததற்கு காரணமென்ன? உடையானது மதவித்தியாசத்தைக் காட்டுகிறது என்பதற்கு இது போதுமான அத்தாட்சி யல்லவா? ஒரே விதமான உடை உடுத்தினால் வகுப்பு வாதக் கலகங்கள் வெகு சீக்கிரத்தில் ஒழிந்து போகும் என்று என்னைப்போலவே இன்னும் பலர் எண்ணுகிறார்கள். ஆதலால் தங்கள் அபிப்பிராயத்தை ஹரிஜன் பத்திரிகையில் எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பதில் :—இந்த நண்பர் படித்தவர்தான். நல்ல எண்ணத்துடன்தான் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனாலும், அவருடைய சிந்தனையில் தெளிவு இல்லை. இப்பொழுது தேவையானது ஒரே விதமான உடையன்று. ஒரே விதமான இருதயமேயாகும். ஒரே விதமான உடையிருந்தால் இந்த விதமான குழப்பங்கள் உண்டாகா என்று சொல்லும் வாதம் எவ்வளவு பிரயோசனமற்றது என்பதை ஐரோப்பாவைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். கெட்ட காற்று போகவேண்டுமானால் நல்ல காற்று வர வேண்டும். அது போல் கெட்ட எண்ணம் மறைய வேண்டுமானால் நல்ல எண்ணம் உண்டாக வேண்டும். அது தான் வழி.

புது தில்லி — 12-10-46 — மோ. க. காந்தி.

## பால் பண்ணை

இங்கிலாந்திலுள்ள பால் பண்ணை நிபுணர்களில் ஒருவரான திரு. பெப்பரால் சென்ற வருஷம் இந்தியாவுக்கு வந்து இங்கு பால் பண்ணைத் தொழில் நடைபெறுவதைச் சுற்றிப் பார்த்துவிட்டு சர்க்காருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்தார். அதிலிருந்து சில விஷயங்கள் இதற்கு முன் இந்தப் பத்திரிகையில் தந்திருந்தோம். இப்பொழுது வேறு சில விஷயங்கள் தருகின்றோம். அவை நன்றாகச் சிந்திக்க வேண்டிய விஷயங்களாகும்.

அவர் கூறுவதன் சாரமாவது :—

இந்தியாவில் பால் பிரச்னை எவ்வளவு பெரியது என்பது கீழ்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிய வரும் :—

பட்டணங்களில் பால் உற்பத்தி செய்வோர் தொகை 1·8 லட்சம்.

கிராமங்களில் பால் உற்பத்தி செய்வோர் தொகை 210 லட்சம்.

உலக முழுவதிலுமுள்ள கறவை மாடுகளின் தொகை 22 கோடி. அதில் மூன்றில் ஒரு பங்கு (அதாவது சுமார் $7\frac{1}{4}$ கோடி) இந்தியாவில் இருக்கின்றன.

பால் குடிப்பவர் தொகை 40 கோடி.

பசுப் பிரச்னையை கிராமங்களின் நிலைமையை வைத்தே ஆராய வேண்டும். ஐரோப்பிய நாடுகளுக்கு வேண்டிய தேவைகள் வேறு; இந்திய நாட்டுக்கு வேண்டிய தேவைகள் வேறு. உதாரணமாக ஐரோப்பாவில் பசுவைக் கறவை மாடாக மட்டுமே உபயோகிக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலோ பசுவைப் பால் தருவதற்கும் பாரமிழுக்கும் காளைகளை உற்பத்தி செய்வதற்கும் உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

(1) பால் உற்பத்தி விஷயமாக என்னுடைய முடிவுகள் வருமாறு :—

(அ) பசு பால் கறப்பதற்கும் காளை உற்பத்தி செய்வதற்கும் உபயோகிக்கப்படுகிறது. அதனால் பசுவோடு எருமையையும் வளர்க்க வேண்டும். எருமை மட்டும் போதும் என்று எண்ணிவிடக் கூடாது.

(ஆ) அன்னிய நாட்டிலிருந்து பொலி காளைகளைத் தருவித்து நல்ல பசுக்களை உண்டாக்குவதை விட்டுவிட்டு நாட்டிலுள்ள பொலி காளைகளைக் கொண்டே நல்ல கறவைப் பசு மாடுகளை உற்பத்தி செய்து பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

அன்னிய நாட்டுப் பொலி காளைகளை உபயோகிப்பதால் நன்மை உண்டாகவில்லை என்று அனுபவத்தில் தெரிகிறது. சேவா கிராமத்தில் காவோலா மாடுகளை உபயோகித்து நல்ல பலன் கண்டிருக்கிறார்கள். அதுபோலவே சர்க்கார் பண்ணைகளிலுள்ள காளைகளையும் உபயோகிக்கலாம். நல்ல தரக் காளைகளைப் பொறுக்கி எடுத்து நல்ல விதமாகப் பாதுகாக்கவும் உபயோகிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(இ) இன்னும் 10-வருஷ காலத்துக்கு இந்தியக் கிராமங்கள் இப்படியே தானிருக்கும் என்றும் நீர் இறைக்கவும் வண்டி இழுக்கவும் ஏர் உழவும் காளைகளே தேவையாகும் என்றும் வைத்துக்கொண்டால் பசு இரண்டு விதமான உபயோகத்துக்கான மிருகமாகவே இருந்து வரவேண்டியதாகும்.

(2) பசுக்களுக்குக் கொடுக்கும் தீனி சம்பந்தமாக என்னுடைய யோசனை இது :—

மிருகங்களின் உணவு சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் ஆராய்ச்சி முடிவுகளைக் கொண்டுபார்த்தால் இந்தியாவிலுள்ள பசுக்கள் மிகவும் குறைந்த போஷணை பெறுவதாகவே முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

(அ) கால் நடைகளுக்கு சரியான போஷணை தரக்கூடிய உணவுகள் சம்பந்தமாக கிராம வாசிகளுக்குத் தக்க கல்வி அளிக்க வேண்டும்.

(ஆ) லூஸெர்ன் புல்லைவிட பெர்ஸீம் புல் அதிக போஷணை உடையதாகும். அதை இங்கே இன்னும் நன்றாகக் கவனிக்கக் காணோம்.

(இ) மேய்ச்சல் நிலங்களில் மாடுகளைத் தினந்தோறும் மேயவிடாமல் பல நாட்களுக்கு ஒரு முறை, வளர்ந்துள்ள புல்லை வெட்டி உபயோகிக்க வேண்டும். பச்சைப் புல் கிடைக்கும் காலங்களில் புண்ணாக்கு பருத்திவிதை போன்ற உணவுகளைக் குறைவாகவே உபயோகிக்க வெண்டும்.

(ஈ) வெளி நாடுகளுக்குக் கால்நடை உணவுகள் அனுப்புவதைத் தடுக்க வேண்டும்.

(3) கால் நடை வளர்ப்பு சம்பந்தமாக அதிக கவனம் செலுத்த வேண்டும்.

(அ) கறவை மாடுகள் விஷயமே மோசம், அப்படியிருக்க கறவை நின்று போன கால்நடைகளின் நிலைமை சொல்ல வேண்டியதில்லை. அதைப் பரிபூரணமாக அலட்சியம் செய்து விடுகிறார்கள். மேய்ச்சல் நிலங்களை அதிகப்படுத்த வேண்டும். கால் நடை உணவுகளை அயல்நாடுகளுக்கு அனுப்புவதைத் தடுக்க வேண்டும், கால் நடைச் சொந்தக்காரர்களுக்கு அதிகமான உணவுகளை வாங்குவதற்கு உதவி செய்ய வேண்டும். சீக்கிரமாகக் கன்று போட விடாமல் தடுப்பதால் அதிகமான பால் நஷ்டம் உண்டாகின்றது.

(ஆ) கன்று போட்ட ஒன்றிரண்டு நாட்களிலேயே அதைத் தாயிடம் பால் குடியாதபடி செய்துவிடலாம். இந்த நாட்டிலுள்ளவர்கள் முடியாது என்று கூறினாலும் இதர நாட்டு அனுபவம் முடியும் என்றே கூறுகின்றது. கன்றுகளுக்கு வேறு உணவுகள் கொடுத்து வளர்ப்பது சாத்தியமாயிருப்பதால் கன்றுகளைத் தாயிடம் பால் குடிக்கவிடாமலேதான் வளர்க்க வேண்டும்.

(இ) பால் உற்பத்தி செய்வோர்க்கு திருப்திகரமான விலை கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்பொழுது பால் விலை மணங்கு 10 ரூ. முதல் 30 ரூ. வரை ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு தைரியம் அளிக்க விரும்பினால் இந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும்.

(4) பால் உற்பத்தி விஷயமும் கவனிக்கப்பட வேண்டியதாகும். பசுக்களை சுத்தமாகவும் காற்றோட்டமுள்ளதும் கட்டியான தளமுள்ளதுமான தொழுக்களில் கட்டி வைக்க வேண்டும். பால் கறப்பதிலும் பாதுகாத்து வைப்பதிலும் சுத்தமான முறைகளை அனுசரிக்க வேண்டும்.

பால் கறப்பவர்கள் சுத்தமான முறைகளைக் கையாளத் தெரியாதிருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் அது விஷயத்தில் அலட்சியமாயுமிருக்கிறார்கள். அவர்கள் அசங்கியமான வழக்கங்கள் உடையவர்களாயுமிருக்கிறார்கள். உத்யோகஸ்தர்களும் அக்கரை இல்லாமலிருக்கிறார்கள்.

சுற்றுப்புறங்களும் அசுத்தமாயிருக்கின்றன. பாலைத் துத்தநாகப் பாத்திரங்களில் திறந்தபடியே தான் மார்க்கெட்டுக்குக் கொண்டு வருகிறார்கள். மார்க்கெட்டில் கூட்டம் அதிகம். அவர்கள் வெற்றிலை போட்டு கண்ட கண்ட இடங்களில் துப்புகிறார்கள். பால் வாங்க விரும்புகிறவர் பாலுக்குள் கையை விட்டே நல்ல பாலா தண்ணீர் கலந்திருக்

கிறதா என்று சோதித்துப் பார்க்கிருர். இந்த விதமாக கிராமங்களிலும் நடக்கின்றது. பட்டணங்களிலும் நடக்கின்றது. பால் மிகவும் உன்னதமான ஆகாரம். அது வெகு எளிதில் கெட்டுப் போகும்படி செய்யக் கூடியது. மற்ற வியாபார வஸ்துக்களைப் போலவே அதுவும் அசுத்தமாக விற்கப்படுகின்றது.

பம்பாயில் சர்க்கார் பாலைப் பரிசோதித்துப் பார்த்த பொழுது ஒரு சிறு கரண்டிப் பாலில் 360 லட்சம் நோய்க் கிருமிகள் இருப்பதாகக் கண்டார்கள். அவர்களுடைய அறிக்கையை வாசிக்க மிகுந்த வருத்தமா யிருக்கிறது.

(5) பாலில் தண்ணீரைக் கலப்பது எங்கும் காணப்படும் தீய வழக்கமாகும். பாஸ்ட்டியர் முறைப்படி பாலைக் காய்ச்சினல் பாலைக் கெட்டுப்போகாதபடி கொஞ்ச தூரத்திலுள்ள ஊர்களுக்கு அனுப்பமுடியும். ஆனல் தண்ணீர் கலப்பதால் அனுப்ப முடிவதில்லை. பாலைக் கறந்தபடியே 5-6–மணி நேரத்துக்கு அதிகமாக வைத்திருக்க முடியாது. எவ்வளவு சீக்கிரமாக உபயோகித்துவிட முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக உபயோகித்துவிட வேண்டும். நகரங்களுக்குப் பக்கத்து இடங்களில் பாலை அதிகமான அளவில் உற்பத்தி செய்யவும் அதை நகரத்துக்குக் கொண்டுவர ரயில் போடவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(6) இந்தியாவில் ராணுவத்தாரும், தயால்பாக் ஸ்தாபனத்தாரும் வேறு ஒரு சில வியாபார ஸ்தாபனங்களும்தான் பால் பண்ணை வைத்து நடத்திவருகின்றன. ஆனல் அவை ஏராளமாக ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றிற்கு வேண்டிய தள வாடங்களை இந்த தேசத்திலேயே எளிதில் உற்பத்தி செய்து கொள்ளலாம். இராணுவத்தார் சாதாரண ஜனங்களுக்கும் பால் கிடையாதபடி பால் பண்ணைகள் நடத்திவருவது கண்டிக்கத் தக்கதாகும். தேசம் முழுவதற்குமான பொதுவான உணவுக் கொள்கையை அனுசரித்தே அவர்கள் தங்கள் காரியங்களை நடத்தி வரவேண்டும்.

(7) கிராமாந்தரங்களில் பால்பொடி முதலியவைகளையும் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். பஞ்சாப்பிலும் சிந்துவிலும் பெரிய நீர்ப்பாசனத்திட்டங்கள் நடைபெறுவதால் அங்கே அதிகமாகப் பயிர் உற்பத்தி செய்யவும் பால் உற்பத்தி செய்யவும் முடியும். அதனல் பால் பொடி உற்பத்தி செய்வதற்கு அந்த இடங்களே மிகவும் தகுதி வாய்ந்தவையாகும். பஞ்சாபிலிருந்து கால்நடைகளை அயல் இடங்களுக்கு அனுப்புவது கூடாது. கிராமாந்திரங்களில் நெய் உற்பத்தி செய்வதைப் பெருக்க வேண்டும். இப்பொழுது பாலைப் பல கிராமங்களிலிருந்து தூரத்திலுள்ள ஒரு இடத்திற்கு அனுப்பி அங்கே நெய் உற்பத்தி செய்து கொண்டு வருகிருர்கள். அது தவறு. கிராமாந்திரங்களில் நெய் உற்பத்தி செய்யாததால் கிராமத்து ஜனங்களுக்கு மோர் கிடையாமல் போகிறது. அதனல் அவர்களுடைய உணவில் போஷணை குறைந்து போகிறது. உண்பதற்கு வெண்ணை வேண்டுமானல் ஆஸ்ட்ரேலியா, நியூஜிலாந்து ஆகிய தேசங்களிலிருந்து தருவித்துக்கொள்ள வேண்டும்.

(8) பாலை தரப்படுத்தும் வேலையை பொறுப்புள்ள ஸ்தாபனங்களே மேற்கொள்ள வேண்டும்.

(9) தேசத்திலுள்ள ஜனங்களின் தேகாரோக்கியமே பிரதானமான காரியமாதலால் பணச் செலவைப் பாராமல் குறைந்த விலைக்குப் பால் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இப்பொழுதுள்ள கால்நடைகளுக்குச் சரியானபடி ஆகாரம் கொடுத்தால் தினந்தோறும் குழந்தை பெற்ற தாய்க்கும் குழந்தைக்கும் கால்படி வீதமும் மற்றவர்களுக்கு அரைக்கால்படி வீதமும் பால் கிடைக்கும்படி செய்யலாம்.

(10) பாலின் விலை எங்கும் ஒரேவிதமாக இருக்கவில்லை. பம்பாயிலும் கல்கத்தாவிலும் சில்லறையாக விற்கும் பால் விலை இங்கிலாந்தில் உள்ளதைப் போல இரண்டு மடங்கு அதிகயாக இருக்கிறது. பால் உற்பத்தி செய்கிறவர்களுக்குக் குறிப்பிட்ட விலை கிடைக்கும்படியாகவும் பால் குடிப்பவர்களுக்கு குறைந்த விலைக்குக் கிடைக்கும்படியாகவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

(11) பால் உற்பத்தி செய்வோருக்குக் கடன் கொடுத்தும் உதவ வேண்டும்.

(12) இந்தியாவில் பால் உற்பத்தி சம்பந்தமான ஆராய்ச்சி கவனிக்கப்படாம லிருப்பது வருத்தத்தைத் தருகிறது. நஞ்சை நிலங்கள் உள்ள இடங்களிலுள்ள கால் நடைகள் க்ஷீணமாக இருப்பதின் காரணத்தையும் அதை மாற்றுவதற் குரிய பரிகாரத்தையும் உடனடியாகக் கவனிக்க வேண்டும். இப்பொழுது பாலை அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் பாட்டில்களில் அடைத்து வைக்கிருர்கள். இந்த நாட்டிலேயே அதற்குத் தக்க விலைகுறைந்த பாத்திரங்கள் தயார் செய்யவும் உடனேஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. பெப்பரால் கூறும் விஷயங்களிலிருந்து நமக்குப் புலனகும் உண்மைகளாவன :—

(1) இப்பொழுது உள்ள கால் நடைகள் அரைப்பட்டினி நிலைமையிலிருந்து கொண்டிருக்கின்றன.

(2) கால் நடைகளை நல்ல விதமாக வளர்க்க வில்லை.

(3) பால் உற்பத்தி நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

(4) பால் உற்பத்தி செய்வோர் எழுத்து வாசனை இல்லாதவர்களாயும், கடன் பட்டவர்களாயும், தரித்திரர்களாயும் இருக்கிருர்கள்.

(5) பாலின் விலை உலகத்திலேயே இந்தியாவில்தான் அதிகம்.

(6) பால் வியாபாரத்தில் இந்தியாவில்தான் லாபம் மிகக் குறைவு.

(7) பாலில் தண்ணீர் சேர்ப்பது சர்வ சாதாரணமான பழக்கமாக இருக்கிறது.

(8) சுகாதார விஷயங்கள் கொஞ்சங் கூடத் தெரியவில்லை.

(9) வியாபாரம் உண்மையான முறையில் நடக்கவில்லை.

(10) பொதுஜனங்கள் அக்கரைக் குறைவாக இருக்கிருர்கள்.

(11) பொது ஸ்தாபனங்கள் தங்கள் கடமைகளை சரிவரச் செய்வதில்லை.

(12) பால் பண்ணைக்கு வேண்டிய தளவாடங்கள் அனேகமாக இல்லை என்றே சொல்லலாம்.

ஆகவே சர்க்கார் உடனே பால் விஷயமாக ஒரு திட்டமான கொள்கையை வகுத்துவிட வேண்டியது அவசியமென்று தெளிவாகத் தெரிகின்றது. ஜனங்களுடைய தேகாரோக்யமும் விவசாய தேசமாகிய இந்தியாவிலுள்ள கால்நடைச் செல்வமும் இப்பொழுது உள்ளதைவிட இன்னும் அதிகமாக மோசமான நிலைமையை அடையாமல் இருக்க வேண்டுமானல் மத்ய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் இந்த விஷயத்தை உடனேயே கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

புது தில்லி அமிர்தகௌரி

## ஒரு கவர்ச்சியுடைய காட்சி

குஜராத் மாகாணத்தில் கம்பீரா என்னும் கிராமத்தில் சிறிய தேசிய கிராமபாடசாலை ஒன்றிருக்கிறது. அந்தப் பாடசாலையிலுள்ள மாணவர்களில் பதின்மூன்று முதல் பதினேழு வயதுள்ள எட்டு மாணவர்கள் நூல் நூற்பதின் மூலம் காந்தி ஜெயந்தி கொண்டாடினார்கள். அந்த எட்டு மாணவர்களும் சேர்ந்து ஆகஸ்டு 16-ம் தேதி முதல் செப்டம்பர் 21-ம் தேதி வரை 1275 மணி நேரத்தில் 578 சிட்டம் அதாவது 36920 சுற்று நூல் நூற்றிருக்கிறார்கள். அவர்கள் தினந்தோறும் ஒரு மணி நேரம் நூற்பது வழக்கம். காந்தி ஜெயந்தி அன்று இவர்கள் நூற்றது தவிர ஆறு கைராட்டினங்கள் 24 மணி நேரம் இடைவிடாமல் ஓடிக்கொண்டிருந்தன. அவைகளில் 43 சிட்டம் நூல் நூற்கப்பட்டது. ஒரு ராட்டினம் இடைவிடாமல் 77 மணி நேரம் சுழன்றது. 30 சிட்ட நூல் நூற்றது. ஆகமொத்தம் 651 சிட்டம் நூல் கிடைத்தது. அது 20 முதல் 32 வரை நம்பர் உடையதாகும்.

நூல் நூற்றவர்கள் எல்லோரும் தங்கள் பள்ளிக்கூடத்தைப்பற்றியும் அதைச் சுற்றியுள்ள இடங்களைப்பற்றியும் அழகாக வர்ணித்து காந்தியடிகளுக்கு கடிதமெழுதி யிருக்கிறார்கள்.

மாணவர்கள் தாங்களே பள்ளிக்கூடத்தைப் பெருக்குகிறார்கள். கக்கூசுகளைச் சுத்தம் செய்கிறார்கள். இடை இடையே கிராமத்திலும் சென்று இந்த வேலைகளைச் செய்கிறார்கள். அதற்காகப் பெருமை கொள்ளவும் செய்கிறார்கள்.

அவர்களில் ஒருவர் எழுதுகிறார் :—

"தேசத்துக்கு வேறு எந்த விதமான சேவையையும் செய்யாவிட்டாலும் பள்ளிக்கூடத்தையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்திருக்கும் சேவையைச் செய்தால் போதுமென்றே நான் எப்பொழுதும் எண்ணி வருகிறேன். அந்தச் சேவை செய்வது தூய்மையான இன்பமாக இருக்கிறது.

மற்றொருவர் எழுதுகிறார் :—

மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் பாராட்டக் கூடாதென்று எங்களுக்குக் கற்பிக்கிறார்கள். நாங்கள் அற்பத் துவேஷங்களை துறந்து விட்டோம். நாங்கள் நூற்ற நூலைக்கொண்டு நெய்யப்பட்ட கதரையே உடுத்தி வருகிறோம். நாங்களாகவே ஒரு புஷ்பத் தோட்டத்தையும் அமைத்திருக்கிறோம்.

ஒரு மாணவி எழுதுகிறார் :—

காந்தி ஜயந்தியன்று நாங்கள் காந்தியடிகளுடைய குடிசையைப் போன்ற ஒரு குடிசையைக் கட்டி நாங்கள் நூற்ற நூலைக்கொண்டு அதை அலங்கரித்தோம். அன்று நாங்கள் கிராம முழுவதையும் சுத்தம் செய்தோம். ஆனால் கொடியேற்று விழா நடந்தபிறகு நாங்கள் பாடசாலைக்குத் திரும்பி வரும் பொழுது ஜனங்கள் அதற்குள்ளாக தெருக்களை அசுத்தப்படுத்தி விட்டதைக் கண்டோம். அது எங்களுக்கு வருத்தமா யிருந்தது. அவர்களுக்கு சுத்தத்தின் அவசியம் இன்னும் தெரியவில்லை என்று தோன்றுகிறது.

மற்ற மாணவர்கள் ஹரிஜன் பிரச்னை, வெள்ளத்தால் ஏற்பட்ட நஷ்டங்கள்போன்ற பல உள்ளூர் வியவகாரங்களைப்பற்றி எழுதி யிருக்கிறார்கள்.

புது தில்லி, — 14-10-46 — பியாரேலால்.

## புகை பிடிக்கும் தீமை

கேள்வி :—தாங்கள் மதுவிலக்கைப்பற்றி அடிக்கடி எழுதிவருகிறீர்கள். ஆனால் புகை பிடிப்பதைப்பற்றி அடிக்கடி எழுதவுமில்லை. எழுதுங்காலத்தில் மதுவிலக்கை வற்புறுத்திக் கூறுவது போல வற்புறுத்திக் கூறவுமில்லை. இந்தத் தீய பழக்கம் அச்சம் தரும்படியான விரைவோடு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. குழந்தைகளுங்கூட நாளுக்கு நாள் அதிகமாக அதில் ஈடுபட்டுவருகிறார்கள். கோடிக்கணக்கான பணம் புகைந்து போய் கொண்டிருக்கிறது. தரித்திரமான இந்த நாட்டில் அந்தப் பணத்தைக் கொண்டு எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்யலாமல்லவா?

பதில் :—இந்தக் குற்றச்சாட்டு உண்மைதான். ஆனால் புதிதன்று. நான் மதுவிலக்கை வற்புறுத்துவது போல் இதை வற்புறுத்தாததற்குக் காரணம் புகை பிடிப்பது ஒரு பெரிய நாகரிக மாக ஆகிவிட்டதே யாகும். ஒரு தீய பழக்கம் நாகரிகமாக ஆகிவிடுமானால் அதை இல்லாமல் ஒழித்து விடுவது கஷ்டமான காரியம். ஆயினும் பிறர்க்குக் கஷ்டம் கொடுக்கும் அந்தத் தீய வழக்கத்தை ஒழிப்பதற்காகக் கிளர்ச்சி செய்யவே வேண்டும். ஆனால் எப்படிச் செய்வது எப்பொழுதுசெய்வது என்பதுதான் கேள்வி. அந்தக் கேள்விக்கு பதில் சொல்ல அசக்தனாயிருக்கிறேன் என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறேன்.

புது தில்லி — 12-10-46 — மோ. க. காந்தி.

## வரதக்ஷிணை என்னும் சாபக்கேடு

கேள்வி :—கலியாணச் சந்தையில் வரதக்ஷிணை கேட்கும் வழக்கம் நாளுக்கு நாள் அதிகமாகப் பெருகிக் கொண்டுவருகிறது. இந்த அநியாயத்தைச் செய்யாதவர்கள் கிடையாது. எவ்வளவுக் கெவ்வளவு மணமகனுடைய தந்தை பணக்காரராக இருக்கிறாரோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக வரதக்ஷிணை கேட்கப்படுகிறது. இந்த வழக்கத்தின் காரணமாக கலியாணமாகக் கூடிய பெண்கள் அநேகர் கலியாணம் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோர்களின் நிலைமையைக் கற்பனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி வர்ணித்துக் கூற முடியாது. ஜனங்களுக்குப் பொறுப்பு வாய்ந்த சர்க்கார்கள் இந்த தீய வழக்கத்தை சட்டத்தின் மூலமாக ஒழிப்பதற்கு உதவி செய்யவேண்டும்.

பதில் :—இந்தக் கேள்வி கேட்பவர் கூறும் விஷயம் ஒரு விசித்திரமான விஷயமாகும். கல்வியானது இந்த வழக்கத்தை ஒழிப்பதற்குப் பதிலாக உறுதிப்படுத்தவே செய்கின்றது. எந்த சமூகத்தாரிடை இந்தச் சாபக்கேடு தோன்றி இருக்கிறதோ அந்த சமூகத்தார் மனோதைரிய மில்லாமல் வெட்கமின்றி அதிலீடுபடுகிறார்கள். ஆனால் காலாகாலத்தில் அவர்கள் விழித்துக் கொண்டாலன்றி அந்தச் சாபக்கேடு அவர்களை அழித்து விடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆதலால் அவர்கள் இடைவிடாமல் ஓய்வு ஒழிவின்றி கிளர்ச்சி செய்ய வேண்டும். வேறு வழி இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

புது தில்லி, — 12-10-46 — மோ. க. காந்தி.

---

**காந்தீய அரசியல்**

காந்தியடிகளின் சிஷ்யர் திரு. எஸ். என். அகர்வால்
எழுதியது. மகாத்மாவின் பாராட்டுரையுடன்
கூடியது. நாமக்கல் கவிஞர் தமிழாக்கியது.
உலகத்துக்கு உய்யும் வழியைக் காட்டும்
உன்னதமான நூல்.
விலை ரூபாய் மூன்று
தமிழ்ப்பண்ணை
தியாகராயநகர், சென்னை.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை